DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No.47/2020
Prosecution witness – P.W.4

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.மலர்க்கொடி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused Present.)
**03.06.2026**
முதல் விசாரணை

1. நான் தற்போது அபிராமம் காவல் நிலையத்தில் சிறப்ப சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் இறுதி கட்ட விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த அபிராமம் காவல் நிலையித்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் திரு.நாகராஜப்பிரபு என்பவர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்.

2. சார்பு ஆய்வாளர் திரு.நாகராஜப்பிரபு என்பவர் கடந்த 14.02.2020 தேதியன்று காலை 09.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்தபோது மேலப்பண்ணைக்குளம் கிராமத்தை சேர்ந்த செந்தூர்பாண்டி மனைவி இந்திராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.73/2020 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 354, 506(2) and 4 of TNPHW Act –ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் அன்றைய தினமே 10.00 மணிக்கு இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனீஸ்வரி மற்றும் பாண்டியம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான பட்டியல் சாட்சிகளான 1 முதல் 4 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை

தேடிவந்த நிலையில் 14.02.2020ம் தேதி 11.30 மணிக்கு நல்லூர் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து எதிரியை காரணம் கூறி கைது செய்து உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்,

5. பின்னர் அத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து அன்றே எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 354, 506(2) and 4 of TNPHW Act –ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகார் மனுவைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.03 18:19:49 +0530